# முதல் இடைப்பருவத் தேர்வு - 2018

# வணிகவியல்

நேரம் : 1.30 மணி　　　பன்னிரெண்டாம் வகுப்பு　　　மொத்த மதிப்பெண் : 50

## பகுதி ---- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :** 10 X 1 = 10

1. பொதுத் துறை அமைபில் மிகவும் பழமையானது ---------
   அ) வாரிய அமைப்பு　ஆ) துறைமுறை அமைப்பு　இ) அரசு நிறுமம்
2. பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ள அமைப்பு
   அ) தனி வணிகர்　ஆ) கூட்டாண்மை　இ) கூட்டுப் பங்கு நிறுமம்
3. பின் வருவனவற்றில் எவை தவறானவை ?
   1. தனியாள் வணிக அமைப்பிற்கு ஏற்ற தொழில்கள் சிற்றளவு வியாபாரம்
   2. தனியாள் வணிகத்தில் வியாபார ரகசியங்களைக் காக்க இயலாது
   3. தனியாள் வணிகத்தில் விரைவாக முடிவு எடுக்கப்படும்
   4. ஒப்பந்தம் , பதிவு முதலியன தனியாள் வணிகத்திற்கு தேவை.

   அ) 1 மற்றும் 4　ஆ) 1 மற்றும் 3　இ) 2 மற்றும் 4
4. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது :
   அ) ஒப்பந்தத்தால்　ஆ) கூட்டாளிகளிடையே உறவு　இ) அரசின் வழிகாட்டல்
5. பின் வருவனவற்றில் எவை சரியானவை ?
   அ) கூட்டாண்மையை இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் 1956 நெறிப்படுத்துகிறது.
   ஆ) இந்தியாவில் கூட்டாளியின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.
   இ) வரையறுத்த கூட்டாண்மை இந்தியாவில் இல்லை.
   ஈ) எஜமானர் மற்றும் பணியாளர் என்ற உறவு கூட்டாண்மையில் உண்டு.
6. கூட்டாண்மையின் அடிப்படைக் கூறு :
   அ) பூரண நல்ல நம்பிக்கை　ஆ) முதலீட்டிற்கான தொகை இருத்தல்
   (இ) கூடி தொழில் செய்ய விருப்பம்.
7. ஒவ்வொரு கூட்டாளியும் தொழிலுக்கு வழங்கிய கடன் மற்றும் முன்பனம் மீது ஆண்டுக்கு ---------- வட்டிபெற உரிமை உண்டு.
   அ) 6 %　ஆ) 10 %　இ) 12 %
8. பாதுகாப்பு தொழிற்சாலைகளுக்கு ஏற்ற உகந்த தொழில்முறை அமைப்பு :
   அ) அரசு நிறுமம்　ஆ) பொதுக்கூடுரு　இ) துறைமுறை அமைப்பு
9. குறிப்பிட்ட வணிக செயல் அல்லது வேலையை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து கொடுக்க உருவாக்கப்பட்ட தற்காலிக கூட்டாண்மை ----------
   அ) விருப்பமுறிக் கூட்டாண்மை　ஆ) இணைவிணை　இ) பொதுக் கூட்டாண்மை
10. இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர்களுக்கு -------- என்று பெயர்.
    அ) கூட்டு வாரிசுதாரர்　ஆ) கூட்டாளி　இ) உறுப்பினர்

## பகுதி --- II

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 17- க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $4 \times 2 = 8$

11. அமைப்பு வரையறு
12. கட்டுப்பாட்டு வீச்செல்லை என்றால் என்ன?
13. தனியாள் வணிகத்திற்கு பொருத்தமான தொழில்கள் நான்கினைக் கூறுக
14. தனியாள் வணிகர் கடினமாக உழைக்க காரணமாக அமைவது எது ?
15. உழையா கூட்டாளி என்றால் என்ன?
16. வியாபார அமைப்பின் நோக்கங்கள் நான்கினைக் கூறுக.

17. எந்த அமைப்பின் மேலாண்மை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுவிடம் உள்ளது? ஏதேனும் இரண்டு எடுத்துக்காட்டு தருக.

## பகுதி --- III

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 19- க்கு கட்டாயம் விடையளிக்கவும். $4 \times 3 = 12$

18. கட்டுப்பாட்டு வீச்செல்லை என்றால் என்ன?
19. கர்த்தா என்பவர் யார்? யாரெல்லாம் கூட்டு வாரிசுதாரர்கள் ?
20. தனியாள் வணிகத்தில் தொழில் தொடங்குவது எளிது. ஏன்?
21. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
22. கூட்டாண்மை வரைவிலக்கணம் தருக
23. உட்கிடை ஆணையுரிமை என்றால் என்ன?
24. தனியாள் வணிக அமைப்பு என்றால் என்ன?

## பகுதி --- IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். $4 \times 5 = 20$

25. பல்வேறு வகையான தொழிலமைப்புகளில் ஏதேனும் ஐந்தினைப்பற்றி சுருக்கமாக விவரி.

( அல்லது )

தனியாள் வணிகத்தின் குணாதிசயங்களில் ஏதேனும் ஐந்தினை விவரி.

26. பன்னாட்டு நிறுமம் என்றால் என்ன? மேலும் அதன் சிறப்பியல்புகள் மற்றும் செயல்பாடுகளை விவரி.

( அல்லது )

கூட்டாளிகளின் வகைகளை விவரி. ( எதேனும் 5 )

27. எச்சூழ்நிலையில் நீதி மன்றத்தால் கூட்டாண்மை கலைக்கப்படுகின்றது?

( அல்லது )

தனியாள் வணிகத்தின் நன்மைகள் ஐந்தினை எழுதுக.

28. கூட்டாளிகளின் உரிமைகள் யாது?

(அல்லது )

கூட்டாண்மையின் சிறப்பு கூறுகளை விவரி.